| Series : HF1EG | | SET – 4 |
|---|---|---|

रोल नं.
**Roll No.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

| प्रश्न-पत्र कोड Q.P. Code | 10 |
|---|---|

परीक्षार्थी प्रश्न-पत्र कोड को उत्तर-पुस्तिका के मुख-पृष्ठ पर अवश्य लिखें ।
Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

# தமிழ்
# TAMIL

*கால அளவு : 3 மணி*
*Time allowed : 3 hours*

*மொ.மதிப்பெண்கள் : 80*
*Maximum Marks : 80*

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **11** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
- இந்த வினாத்தாளில் **14** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
- வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.
- **எழுதத் தொடங்குவதற்கும் முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிடவும்.**
- வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும் 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.

- Please check that this question paper contains **11** printed pages.
- Please check that this question paper contains **14** questions.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- **Please write down the serial number of the question in the answer-book at the given place before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

~

***General Instructions :***

பொதுவான வழிமுறைகள் :

1. *The questions paper contains **FIVE** sections.*

   இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது.

2. *It has total **14** questions.*

   இவ் வினாத்தாள் 14 கேள்விகளைக் கொண்டுள்ளது.

3. *Section **A** – contains **2** questions. [Question No. **1** to **2**]*

   பகுதி அ – 2 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் 1 முதல் 2 வரை]

4. *Section **B** – contain **4** questions. [Question No. **3** to **6**]*

   பகுதி ஆ – 4 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் 3 முதல் 6 வரை]

5. *Section **C** – contain **4** questions. [Question No. **7** to **10**]*

   பகுதி இ – 4 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் 7 முதல் 10 வரை]

6. *Section **D** – contain **1** question. [Question No. **11**]*

   பகுதி ஈ – 1 வினாவைக் கொண்டுள்ளது. [வினா எண் 11]

7. *Section **E** – contain **3** questions. [Question No. **12** to **14**]*

   பகுதி உ – 3 வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் 12 முதல் 14 வரை]

8. *Attempt as per specific instructions for each question.*

   வினாக்களின் தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

9. *Please write down the Serial no. of the question in the answer book before attempting it.*

   பதிலளிக்கும் முன்பு வினா எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறிப்பிடுக.

## SECTION – A [Reading] 10 Marks

### பகுதி – அ (படித்தல் திறன்) 10 மதிப்பெண்கள்

1. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

மரங்கள் நம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அரண் எனக் கூறலாம். மரங்கள் தான் மண் வளத்தைப் பேணிக்காக்கின்றன. மரங்கள் பகலில் உயிர்க்காற்றை நமக்குத் தருகின்றன. புவியின் வெப்பத்தைத் தணிக்க உதவுகின்றன. ஆனால் மனிதன் தம் சுயநலத்திற்காக மரங்களை வெட்டி அதிலிருந்து காகிதம், இரப்பர், கோந்து, மேஜை, நாற்காலி போன்ற அழகிய மரப்பொருட்களை செய்து விற்கின்றான். இதனால் மனிதர் எதிர்கொள்ளப்போகும் துயரங்கள் ஏராளம். இந்தியாவில் 60 சதவீதம் மரம் இருக்க வேண்டும்.

அசோகச் சக்கரவர்த்தி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மரத்தின் அருமையை உணர்ந்து சாலையின் இரு மருங்கிலும் எண்ணற்ற மரங்களை நட்டார். எனவே நாமும் மரம் வளர்ப்போம். அரசாங்கமே ஒருவர் பத்து மரம் வளர்க்க வேண்டும் எனச் சொல்கிறது. மரங்கள் மனிதருக்கு மட்டும் அல்லாது எண்ணற்ற உயிர்களுக்கும் அரணாக உள்ளது. மரங்கள் பல மருத்துவ குணங்கள் வாய்ந்தவை.

வினாக்கள்:

(i) மரங்களில் இருந்து நமக்கு கிடைக்கும் பொருட்கள் என்னென்ன?

(A) காகிதம், மேசை (B) காகிதம், சுண்ணாம்பு

(C) மேசை, கண்ணாடி (D) இரப்பர், தகரம்

(ii) அசோகச் சக்கரவர்த்தியின் செயல் யாது?

(A) ஊர் தோறும் மரம் நட்டார்

(B) சாலையின் இரு மருங்கிலும் மரம் நட்டார்

(C) மரங்களை வெட்டி பொருட்கள் செய்தார்

(D) காடு, மலைகளில் மரம் நட்டார்

(iii) மரங்களை எவ்வாறு அழைக்கலாம்?

(A) பாதுகாப்பு வளையம் (B) வேலி

(C) கோட்டை (D) அரண்

(iv) மரங்கள் நமக்கு எக்காற்றைத் தருகின்றன?

(A) கரியமில வாயு (B) உயிர்க்காற்று

(C) ஹைட்ரஜன் வாயு (D) நைட்ரஜன் வாயு

(v) மரங்கள் எதைப் பேணி பாதுகாக்கின்றன?

(A) காட்டு வளம் (B) செம்மண் வளம்

(C) மண் வளம் (D) வண்டல் மண் வளம்

2. பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

சிலப்பதிகாரம், புகாரில் நெடுநிலை மாடங்கள் பல இருந்ததையும் அழகான வேலைப்பாடுகளோடு கூடிய சாளரங்கள் மாளிகையில் பொருத்தப்பட்டிருந்ததையும், சரக்குகள் நிறைந்த பண்டகச் சாலைகளையும், மாளிகைகளில் நிலா முற்றம் அமைக்கப்பட்டு இருந்ததையும் குறிப்பிடுகின்றது. மதுரை நகரிலும் மாடங்கள் நிறைந்திருந்தன. 'நான்மாடக்கூடல்', 'சேய்மாடக்கூடல்' 'நீள்மாடக்கூடல்,' 'நெடுமாடக்கூடல்' என்ற அடைகளால் பல மாடங்கள் வானோக்கி வளர்ந்த கட்டடப் போக்கினை பெற்றிருந்ததை அறியலாம். மதுரையில் நீளமான வாயில் நெடுங்கதவோடு அமைந்திருந்தது. மன்னன் பேரிசைக் கோவிலும், கடவுளர் கோவில்களும், பள்ளிகளும் அங்கே சிறந்து விளங்கின. சேரநாட்டின் தலைநகரமான வஞ்சியில் சேரன், வேண் மாளுடன் வெள்ளி மாடத்தில் இருந்தானெனச் சிலம்பு கூறுகிறது. வஞ்சியில் மன்றங்களும் சதுக்கங்களும் நிறைந்து இருந்தன என மணிமேகலை கூறுகின்றது

**வினாக்கள்:**

(i) நீள்மாடக்கூடல் அமைந்த இடம் எது?

(ii) பண்டகச் சாலைகளில் எவை நிறைந்து இருந்தன?

(iii) மாளிகைகளில் எது அமைக்கப்பட்டிருந்தது என சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது?

(iv) மன்னர்கள் காலத்தில் சிறந்து விளங்கியவை எவை?

(v) சேர நாட்டின் தலைநகரம் எது?

## SECTION – B [Grammar] 12 Marks

## பகுதி – ஆ (இலக்கணப்பகுதி) 12 மதிப்பெண்கள்

3. சான்று தருக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) பாலைத்திணைக்குரிய தொழில்

(A) ஆநிரை மேய்த்தல் (B) உழவுத்தொழில்

(C) நிரை கவர்தல் (D) மீன் பிடித்தல்

(ii) கொளல் வினா

(A) ஒரு பொருளை வாங்கும் பொருட்டு வினவும் வினா

(B) ஒரு பொருளை வழங்கும் பொருட்டு வினவும் வினா

(C) ஒரு பொருளை யாசிக்கும் பொருட்டு வினவும் வினா

(D) ஒரு பொருளை களவாடும் பொருட்டு வினவும் வினா

(iii) முன்னிலைப் பெயர்கள்

(A) அவன், அவர்கள் (B) நான், நாங்கள்

(C) யான், யாம் (D) நீர், நீவிர்

(iv) உரிச்சொல் தொடர்

(A) அவரே சொன்னார் (B) பாடினாள் விமலா

(C) சாலப்புகழ்ந்தான் (D) கண்ணா வா!

(v) வேற்றுமைத் தொகை

(A) ஊறுகாய் (B) மொழிகற்றான்

(C) இந்திய நாடு (D) கார்குழல்

4. கோடிட்ட இடங்களை நிரப்புக. *(மூன்று மட்டும்)* **3 × 1 = 3**

(i) தொகை நிலைத் தொடர்கள் இல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருவது ________

(A) வினைத்தொகை (B) பண்புத் தொகை

(C) உம்மைத் தொகை (D) அன்மொழித் தொகை

(ii) அளபெடை _____ வகைப்படும்

(A) மூன்று (B) இரண்டு

(C) நான்கு (D) ஐந்து

(iii) அகம், புறம் ஆகிய இரண்டும் _____இலக்கணம் ஆகும்.

(A) எழுத்து (B) சொல்

(C) பொருள் (D) யாப்பு

(iv) தலை வலிக்கிறது ______ விடை

(A) உறுவது கூறல் (B) உற்றது உரைத்தல்

(C) ஐய வினா (D) இனமொழி

(v) உயர்திணைக்குரிய பால் பிரிவுகள் ______

(A) ஆண்பால், பெண்பால்

(B) ஆண்பால், பெண்பால், பலர்பால்

(C) ஒன்றன்பால்

(D) பலவின்பால்

5. இலக்கணக் குறிப்பு தருக : *(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)* **3 × 1 = 3**

(i) வாரா

(A) வினைத்தொகை

(B) விளத்தொடர்

(C) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

(D) தொழிற்பெயர்

(ii) உரனசை இ

(A) செய்யுளிசை அளபெடை (B) இன்னிசை அளபெடை

(C) சொல்லிசை அளபெடை (D) ஒற்றளபெடை

(iii) கைதொழுது

(A) உவமைத்தொகை (B) வேற்றுமைத் தொகை

(C) பண்புத் தொகை (D) வினைத்தொகை

(iv) அத்திக்காய்

(A) தனிமொழி (B) தொடர்மொழி

(C) பொதுமொழி (D) இனமொழி

(v) இரவு பகல்

(A) எண்ணும்மை (B) உம்மைத்தொகை

(C) பெயரெச்சத்தொடர் (D) வினையெச்சத் தொடர்

6. கூறியவாறு செய்க : (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) நாயால் கடியுண்டான் – முதனிலைத் தொழிற்பெயரை எடுத்து எழுதுக.

(A) நாய் (B) கடி

(C) ஆல் (D) உண்டான்

(ii) மருதத்திணைக்குரிய பெரும் பொழுதைக் கூறு.

(A) கார்காலம் (B) இளவேனிற்காலம்

(C) குளிர்காலம் (D) ஆறு பொழுதுகள்

(iii) ஆட வருமா? இத்தொடரை இனமொழி விடையாக்குக.

(A) ஆடவரும் (B) ஆட வராது

(C) தலை வலிக்கும் (D) பாட வரும்

(iv) இன்று வருவான் – கால வழுவை நீக்கி எழுதுக.

(A) நேற்று வருவான் (B) இன்று வருகின்றான்

(C) நாளை வருவான் (D) நேற்று வந்தான்

(v) அப்துல்லா – பெயரெச்சத் தொடராக மாற்றுக.

(A) வந்த அப்துல்லா (B) அப்துல்லா வந்தான்

(C) வந்தான் அப்துல்லா (D) வருவான் அப்துல்லா

## SECTION – C (Main Course Book) 31 Marks
## பகுதி – இ (இலக்கியம்) 31 மதிப்பெண்கள்

7. பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக. **2 × 1 = 2**

(i) சொல்லப் பயன்படுவர் ______ கரும்பு போல்
கொல்லப் பயனபட்டும் கீழ்

(A) பெரியோர் (B) சிறியோர்

(C) சான்றோர் (D) ஈன்றோர்

(ii) நச்சப் படாதவன் செல்வம் ______
நச்சு மரம்பழுத் தற்று.

(A) நடுஊருள் (B) பொதுஊருள்

(C) வெளியூருள் (D) நல்லூரில்

8. பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

“அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருந்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று”

(i) இப்பாடலில் பெருமை படுத்தப்படுவது எது ?

(A) செல்வம் (B) கல்வி

(C) நட்பு (D) இரக்கம்

(ii) இப்பாடலடிகள் இடம் பெற்ற நூல் _____

(A) பூத்தொடுத்தல் (B) பரிபாடல்

(C) மலைபடுகடாம் (D) நீதிவெண்பா

(iii) மருள் – என்பதன் பொருள்

(A) இருள் (B) அருள்

(C) மயக்கம் (D) பயம்

(iv) செய்குதம்பிப் பாலவர் ______மாவட்டத்தில் பிறந்தார்

(A) தூத்துக்குடி (B) மன்னார்குடி

(C) ஈரோடு (D) கன்னியாகுமரி

(v) செய்குதம்பிப் பாலவர் எவ்வாறு பாராட்டப் பெற்றார்?

(A) கவிச் சக்கரவர்த்தி (B) சதாவதானி

(C) பாவேந்தர் (D) புரட்சிக்கவிஞர்

9. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. **$3 \times 3 = 9$**

(i) சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன் பற்றி கூறுக.

(ii) நவீன கவிதைளில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.

(iii) பக்தி இலக்கியங்களில் எவ்வாறு அறிவியல் கருத்துகள் செறிந்திருந்தன?

(iv) தினைச்சோறு விருந்தைப் பற்றி எழுதுக.

(v) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

10. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. **3 × 5 = 15**

(i) தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.

(ii) விருந்தோம்பல் அன்றும் இன்றும் எவ்வாறு மாறியுள்ளது என்பதை விரிவாக எழுதுக.

(iii) செயற்கை நுண்ணறிவு கணினி மற்றும் மென்பொருள் இயந்திர மனிதன் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(iv) மொழிபெயர்ப்பு கல்வி குறித்து எழுதுக.

(v) கூத்துப்பட்டறை ந. முத்துசாமி பற்றி எழுதுக.

## SECTION – D (Non-Detail) 10 Marks

## பகுதி – ஈ (துணைப்பாடம்) 10 மதிப்பெண்கள்

11. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. **1 × 10 = 10**

(i) விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை

(ii) கோபல்லபுரத்து மக்கள்

(iii) பாய்ச்சல்

## SECTION – E (Creative Writing) 17 Marks

## பகுதி – உ (படைப்பாற்றல்) 17 மதிப்பெண்கள்

12. (அ) கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. **1 × 3 = 3**



**For Visually impaired Candidates**

(ஆ) பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா

பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.

(i) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

(ii) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று வரைக. **1 × 8 = 8**

(i) நீர் சுற்றுலா செல்ல அனுமதி வேண்டி நும் பெற்றோருக்குக் கடிதம் எழுதுக.

*(அல்லது)* **(OR)**

(ii) உம் பகுதியில் மின்சாரம் தடைபடுவதைத் தவிர்க்கக் கோரி மின்வாரிய ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

*(இரண்டு கடிதங்களிலும் நும் முகவரி இ. பர்கனா / இ. பாசித்அலி, எண். 32, கந்தன் தெரு மதுரை – 600 302.*

14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. **1 × 6 = 6**

(i) முன்னுரை – இளமையில் கல் ‾ கற்றோரின் சிறப்பு – வள்ளுவர் வாக்கு – கல்லாமை குற்றம் – அழியாச் செல்வம் – வாழ வைக்கும் கல்வி – முடிவுரை

(ii) முன்னுரை – உண்மையின் இலக்கணம் – வாய்மையின் உயர்வு – முடிவுரை

(iii) முன்னுரை – திரைப்படம் தோற்றமும் வளர்ச்சியும் – படக்காட்சியால் பெறும் நன்மைகள் – தீமைகள் – முடிவுரை